முருகப்பெருமான் துணை

**மகான் அகப்பைச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.09.2022**, செவ்வாய்கிழமை

1. பொன்முட்டை வாத்தான ஞானம்விட்டு
பொறிபுலன் வழி பிறப்பின் ரகசியமறியா
இன்பமென மாயை சிக்கலுக்குள்
எக்கணமும் விட்டகலும் வழிகாணா
2. காணா உழலுகின்றமானிடா கேள்
கலிஉனை வருத்தி மடிக்க நேரும்
ஞானமாக அன்னதனால் அனுகூலஆசி
நாட்டிடுவேன் அகப்பைச்சித்தர் யானும்
3. யானும் சுபகிருது தரிவை திங்கள்
உபய திகதி மங்கள வாரமதில்
**(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 03ம் நாள், 20.09.2022 செவ்வாய்கிழமை)**
ஞானதேசிகன் அனுகூலம் பெற்று
ஞானம்பெற மக்களை நோக்கியே
4. நோக்கமதில் மக்களின் மேலே
நீதிபட தயவை வழங்கி அருளும்
தக்கதொரு அரங்கன் அவதாரம்
தண்டாயுதன் விரும்பி தந்ததாகும்
5. ஆகவே பொறிபுலன் வழியான
அனைத்து மாசுக்களும் அகன்று
மிகைபட ஞான சூட்சுமம் அறிந்து
முழுமைநிலை அடைந்து தேற
6. தேறவே மாதவராஜன் அரங்கன்
திருவடி அனுகி தீட்சை பெற்று
மாறாத உயர் குணம் சன்மார்க்கம்
மகான் வழிகாட்டும் வழிவழியான
7. ஆனதொரு ஞானியர்கள் வரிசையில்
அனுகூலம் எங்களுக்கும் தா என
அனுதினமும் பூசையாகத் தொடர
அகிலம் எங்கிலும் சம காலத்தில்
8. காலத்தில் ஞானவான்கள் சக்தி
கருணையாக மாதரும பலமாக
உலகமெங்கும் இறங்கி இனிதே
உயர்வான மாற்றம் காணக் கூடும்
9. கூடவே அரங்கன் பிறவி வழி
குறைவிலா ஞானவான்கள் வர
நாடெங்கிலும் அதிசயம் கூடியே
நாடாளும் அதிகார நிலை கொண்ட

10. கொண்டநல் மாந்தர்களும் தானாய்
குருவரங்கன் அருமை அறிந்து
தொண்டர்களாகி வந்திணைந்து
தேசிகனார் அருளாசி பெற்று

11. பெற்றுமே வினைகள் விலகி
பேருலகை ஞானவழி நடத்தும்
ஆற்றல் கூடி ஞான ஆட்சி
ஆறுமுகனார் தலைமை ஏற்றுபுரிய நேரும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–